பெண்கள் பகுதி

# நீரே என் அடைக்கலம்



சகோதரி.
கலா வின்சென்ட்ராஜ்

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதரிகளுக்கு இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

நாம் வாழும் இந்த உலகத்தில் அநேகப் போராட்டாங்களும், பிரச்சனைகளும் சூழும்போது எங்கு போவோம்? யாரிடத்தில் போவோம் என்று கலங்குகிறோம். பலர் வெயிலின் கொடுமையை சற்று மாற்றிக்கொண்டு இளைப்பாற ஊட்டி, கொடைக்கானல் போன்ற மலைப் பகுதிகளுக்கு சென்று ஓய்வெடுக்கிறார்கள். புகுந்த வீட்டில் பிரச்சனை என்றால் தாய் வீட்டிற்கு போக நினைக்கிறார்கள். தற்போது செய்து கொண்டிருக்கும் வேலையில் நெருக்கடி என்றால் வேறிடம் போய்விட வேண்டும் என்று நினைக்கிறார்கள், இவைகளின் மூலம் அவர்களுடைய வேதனை நீங்கி இளைப்பாற முடியும் என்று எண்ணுகிறார்கள். உண்மையில் சிலகாலம், சிலநாட்கள் அது நமக்கு ஓய்வையும், இளைப்பாறுதலையும் தந்தாலும் தொடர்ந்து அந்த இளைப்பாறுதலை நாம் காணமுடிவதில்லை. இயேசுகிறிஸ்துவாகிய மறைவிடத்திற்குள், அடைக்கலத்திற்குள் வருகிறவர்களுக்கு கிடைக்கும் ஆசீர்வாதங்களைப் பற்றி நாம் பார்ப்போம்.

> இயேசு கிறிஸ்துவாகிய மறைவிடத்திற்குள், அடைக்கலத்திற்குள் வருகிறவர்களுக்கு ஆசீர்வாதங்கள் கிடைக்கும்

## கர்த்தருடைய நாமம் நமக்கு அடைக்கலம்

கர்த்தரின் நாமம் பலத்ததுருகம், நீதிமான் அதற்குள் ஓடி சுகமாயிருப்பான். நீதி 18:10

இன்றைக்கு நமக்கென்று ஒரு மறைவிடம் இருக்கிறது. அது கர்த்தரின் நாமம். அதனால் தான் கர்த்தரின் நாமம் பலத்துருகம். நீதிமான் அதற்குள் ஓடி சுகமாயிருப்பான் என்று வேதம் சொல்கிறது. அவரிடம் ஓடி நாம் மறைந்து கொண்டு நம் மனதின் பாரங்களை, கவலைகளை இறக்கி வைத்து, கர்த்தாவே நீர் எல்லாவற்றையும் பொறுப்பெடுத்துக் கொள்ளும் என்று நம் கவலைகளை மறந்து அவருடைய மார்பிலே இளைப்பாற முடியும். அந்த மறைவிடத்திற்குள் நாம் வரும் போது மனஅமைதியையும், இளைப் பாறுதலையும் பெற்றுக் கொள்ள முடியும்.

நான் எப்பொழுதும் வந்தடையத்தக்கக் கன்மலையாயிரும், என்னை இரட்சிப்பதற்குக் கட்டளையிட்டீரே, நீரே என் கன்மலையும் என் கோட்டையுமாய் இருக்கிறீர். சங் 71:3

நமக்கு ஒரு இளைப்பாறும் இடமிருக்கிறது. இந்தியாவில் ஒரு ஆச்சரியமான, பழமையான கதை உண்டு. சிபி சக்கரவர்த்தி என்ற அரசன் இந்தியாவை ஆண்டபோது ஒரு புறாவை பருந்து ஒன்று துரத்தி வந்ததால் அந்த புறா அரசனின் மடியிலே அடைக்கலம் புகுந்தது. அது நடுங்கிக் கொண்டு நின்றதால் அரசன் அதற்கு முழுபாதுகாப்பை கொடுக்க தீர்மானித்தார்.

ஆனால் அதை துரத்தி வந்த பருந்து அந்த புறாவை என்னிடம் தாரும் அது என்னுடைய உணவு என்றது. ஆனால் அரசனோ என்னிடம் அடைக்கலம் புகுந்த இந்த புறாவை நான் உன்னிடம் தருவதில்லை. அதற்கு பதிலாக என் மாம்சத்தை ஒரு தராசிலே நிறுத்தி தருகிறேன் என்றார். எவ்வளவு சதைகளை அறுத்து வைத்தாலும் அது புறாவின் எடைக்கு சரியாய் வராததினாலே தானே அந்த தராசில் ஏறி நின்றார்.

ஒரு சாதாரண ராஜாவே தன்னிடம் அடைக்கலமாய் ஓடிவந்த அந்த புறாவை காப்பாற்றியிருப்பாரானால், கர்த்தரிடத்தில் அடைக்கலமாய் ஓடி வந்த நம்மை, புறாவைக் காட்டிலும் விசேஷித்த நம்மை காப்பாற்றாமல் இருப்பாரா? நிச்சயம் காப்பாற்றுவார். நம் அருமை ஆண்டவர் நமக்காக சிலுவையிலே தம்மை பலியாக தந்திருக்கிறாரே. சிலுவையில் தம்மையே பலியாக ஒப்புக் கொடுத்ததினிமித்தம், தம் மாம்சத்தை கிழிக்கக் கொடுத்து, இரத்தம் எல்லாம் சிந்தினதினிமித்தம் சாத்தானின் கையிலிருந்து நம்மை காப்பாற்றுகிறார். சாத்தான் அவரிடம் நம்மை விட்டுவிடும். அவர்கள் என்னுடையவர்கள் என்று போராடினாலும் இயேசு இல்லை என்னிடம் அடைக்கலமாய் ஓடி வந்த இவர்களுக்காக நான் மரிக்கிறேன் எனறு தம்மையே நமக்காக அர்ப்பணித்தார். இன்றைக்கு இயேசுவே உம்முடைய நாமத்துக்குள் நான் ஓடி வருகிறேன் என்று அடைக்கலம் புகுந்து கொள்ளுங்கள். அவர் தமது சிறகுகளாலே உன்னை மூடுவார்; அவர் செட்டைகளின் கீழே அடைக்கலம் புகுவாய்; அவருடைய சத்தியம் உனக்குப் பரிசையும் கேடகமுமாகும். சங்91:4-ன்படி அவர் செட்டைகளில் அடைக்கலம் புகுந்தால், அவர் தமது சிறகுகளால் நம்மை மூடி பாதுகாப்பார். அவரிடம் ஓடி வரும்போது பாதுகாக்கப்படுகிறோம்.



## கர்த்தருடைய வார்த்தை நமக்கு அடைக்கலம்



ஆபிரகாமின் வாழ்க்கையில் நிச்சயமாகவே நான் உன்னை ஆசீர்வதிக்கவே, ஆசீர்வதித்து பெருகவே பெருகப் பண்ணுவேன் என்று தேவன் சொன்ன வாக்குத்தத்தை பெற பொறுமையோடும் விசுவாசத்தோடும் இருந்து அந்த ஆசீர்வாதத்தைப் பெற்றார். நமக்கு முன் வைக்கப்பட்ட நம்பிக்கையைப் பற்றிக் கொள்ளும்படி அடைக்கலமாய் ஓடிவந்த நமக்கு இரண்டு மாறாத விசேஷங்களினால் நிறைந்த ஆறுதலுண்டாகும்படிக்கு எவ்வளவேனும் பொய்யுரையாத தேவன் அப்படிச் செய்தார். எபி 6:18. ஆபிரகாமைப் போல நமக்கு முன்வைக்கப்பட்டிருக்கிற நம்பிக்கையான வாக்குத்தத்தங்கள் என்ன? அதை பற்றிக்கொள்ளும்படி, நாம் அடைக்கலமாய் அவரிடத்தில் ஓடி வர வேண்டும், மேலும் 11ஆம் வசனம் சொல்கிறது நீங்கள் அசதியாயிராமல், வாக்குத்தத்தமான ஆசீர்வாதங்களை விசுவாசத்தினாலும் நீடிய பொறுமையினாலும் சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களைப் பின்பற்றுகிறவர்களாயிருந்து என்று சொல்லப்பட்டுள்ளது. அசதியாயிராமல் நாம் வாக்குத்தத்தமான ஆசீர்வாதங்களை விசுவாசத்தினால் சுதந்தரிக்க பொறுமையோடும் இருக்க வேண்டும். அப்படி செய்யும் போது தேவனால் ஆறுதலும், அற்புதமும் பெற்றுக் கொள்வீர்கள். நாம் பெற்றுக்கொள்வோம் என்ற நம்பிக்கை தான் தடைகளைத் தகர்த்து, திரையை கிழித்துக் கொண்டு போகிற ஆத்தும நங்கூரமாயிருக்கிறது. உங்கள் வாழ்விலும் தேவன் கொடுத்த வாக்குத் தத்தம் நிறைவேற விசுவாசித்து பொறுமையோடு இருந்து தேவநம்பிக்கையை பற்றிக் கொண்டிருங்கள். அப்பொழுது ஆறுதலும், அற்புதமும் காண்பீர்கள்

## கர்த்தருடைய செட்டைகள் நமக்கு அடைக்கலம்

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய செட்டைகளின் கீழ் அடைக்கலமாய் வந்த உனக்கு அவராலே நிறைவான பலன் கிடைப்பதாக. ரூத் 2:12

ரூத்தின் வாழ்க்கையிலே எல்லாம் இழந்திருந்தாலும், வெறுமையாக்கப்பட்ட ஒருநிலை அவளுக்கு இருந்தாலும், அவள் தன் மாமியை பின்பற்றி உம்முடைய தேவன் என்னுடைய தேவன் என்று இஸ்ரவேலின் தேவனிடத்தில் அடைக்கலமாய் ஓடி வந்தாள். இந்த தேவன் எனக்கு தேவனாய் வேண்டும் என்று வந்த அவளை தேவன் வெறுமையாய் விடவில்லை. என் நாமத்தின் மேல் விசுவாசம் வைத்து என்னை ஏற்றுக்கொள்ளுகிறவர்கள் எத்தனை பேர்களோ அத்தனை பேரும் தம்முடைய பிள்ளைகளாகும்படி அதிகாரம் கொடுத்தார் யோவா 1:12-ல் சொல்லப்பட்ட வார்த்தையின்படி ரூத் தேவனுடைய பிள்ளை என்ற அதிகாரத்தைப் பெற்றாள். முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்கு கூடக் கொடுக்கப்படும் மத் 6:33 என்ற வார்த்தையின்படி தேவனிடம் அடைக்கலமாய் ஓடிவந்து, அவரை ஏற்றுக் கொண்ட அவளுக்கு நிறைவான பலன் கிடைத்தது. ஒன்றிலும் அவள் குறையவில்லை. அதே போல தேவன் உங்களையும் நிறைவான நன்மையினால், பலனினால் நிரப்பி ஆசீர்வதிப்பார். என் ஆண்டவராகிய தேவன் தாமே இந்த செய்தியை வாசிக்கின்ற உங்கள் ஒவ்வொருவரையும் தம்முடைய நாமத்தினால் ஆசீர்வதித்து, பாதுகாத்து வழி நடத்துவாராக.



### சிறுவர் பகுதி

## நீ நினைக்காததும் நிறைவேறும்

### ஹலோ குட்டீஸ் நல்லாயிருக்கீங்களா?

தமிழ்நாட்டின் தென் மாவட்டத்திலுள்ள ஒரு ஆரம்ப பள்ளியின் தலைமை ஆசிரியர், ஐந்தாம் வகுப்பு மாணவ மாணவிகளுக்கு பாடம் எடுத்துக் கொண்டிருந்தார். ரைட் சகோதரர்கள் ஆகாய விமானத்தைக் கண்டுபிடித்து வானில் பறக்கச் செய்தது பற்றி சொல்லிக் கொண்டிருக்கும் போதே சில மாணவர்கள் குறும்புத்தனமாக சார் நாங்க எல்லாம் விமானத்தில் எப்போது பறப்பது என்றார்கள். தலைமை ஆசிரியருக்கு தடுமாற்றம் பதில் சொல்ல முடியவில்லை அமைதியாய் இருந்தார். ஆனால் ஒன்று செய்தார் தன் நண்பர்கள், ஊரில் உள்ளவர்களிடம் பணம் சேகரித்து ஒரு குறிப்பிட்ட நாளில் அந்த ஐந்தாம் வகுப்பு மாணவ மாணவிகள் 20 பேரை மதுரையிலிருந்து சென்னை வரை விமானத்தில் கூட்டிச் சென்றார். அந்த அரசு பள்ளி மாணவர்கள் கனவில் கூட நினைத்துப் பார்க்காதது நிறைவேறினவுடன் ஆச்சரியத்தில் மூழ்கினார்கள்.

